IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **103/2019** |
| | | P/ W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | போஸ் | CASTE | : | – |
| S/O | சோத்தான் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | கோடாங்கிபட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **45** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனது தரப்புப்படி வழக்குச்சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்று அதில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2வது இலக்கச்சொத்து நத்தம் வீட்டடி காலிமனை என்றால் சரிதான். 2ம் இலக்கச்சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.4 பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேன்.

2. எதிர்வழக்குரையில் 04.09.1974ல் 2ம் இலக்கச்சொத்தை நாச்சியப்ப தேவருக்கு கிரையம் பெற்றார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அது சரிதான். மேற்படி சங்கதியை தெரிந்து கொண்டபின் வழக்குச்சொத்திற்கு நான் வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் நாச்சியப்ப தேவர் கிரையம் பெற்றார், அதன்பிறகு பதிவு செய்யப்படாத வெண்ணிலை கிரையப்பத்திரம் மூலம் என் அப்பா கிரையம் பெற்றார். மேற்படி வெண்ணிலை கிரையப்பத்திரம் பற்றி எனது வழக்கிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

3. 1974லிருந்து வழக்கு தாக்கல் செய்யும்வரை 2ம் இலக்கச்சொத்திற்கு வில்லங்கச்சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நாச்சியப்ப தேவருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட 2ம் இலக்கச்சொத்திற்கு, தவறுதலாக எனது அப்பா பெயரில் பட்டா ஏற்பட்டதால், பட்டா மாற்றம் செய்ய காலதாமதம் ஆகும் என்பதால், எனது அப்பாவும், நாச்சியப்ப தேவரும் சேர்ந்து ஜோதி என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ஜோதி என்பவர் 2ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான்.

4. எனது அப்பாவும், நாச்சியப்ப தேவரும் 30.08.2018ம் தேதி 2வது இலக்கச்சொத்தை ஜோதிக்கு கிரையப்பத்திரம் மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2ம் இலக்கச்சொத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டா மட்டும் இருந்ததால் அவருக்கு சொத்தில் வேறு உரிமையில்லை என்றால் சரியல்ல. நாச்சியப்ப தேவர் அவருக்கு பாத்தியப்பட்ட

சொத்தை ஜோதிக்கு கிரையம் செய்துகொடுத்து தற்போது சொத்திற்கான வரி செலுத்தி ஜோதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

5. 2ம் இலக்கச்சொத்து ஜோதிக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டது, அது எனது கூட்டுக்குடும்ப சொத்தாக இல்லாததால் அது எனக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல. எனது அப்பா 2022ல் இறந்தார். எனது அப்பா உயிருடன் இருந்தபொழுது 2002ம் ஆண்டு வாய்மொழி பாகம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின்படி 4ம் பிரதிவாதிக்கு சர்வே எண் 116/6A ல் உள்ள 35 செண்டு நிலமும், சர்வே எண் 120/1ல் உள்ள 2 செண்டு காலியிடமும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல, சர்வே எண் 116/6A ல் உள்ள 35 செண்டு நிலம் மட்டும்தான் ஒதுக்கப்பட்டது.

6. எனது சகோதரரான 7ம் பிரதிவாதிக்கு சர்வே எண் 2/5A ல் உள்ள 22 செண்டும், சர்வே எண் 3/2ல் உள்ள 25 செண்டு, சர்வே எண் 120/1ல் உள்ள 2.5 செண்டும் ஆக மொத்தம் 49.5 செண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மேற்படி சொத்துக்களில் முதல் இரண்டு சொத்துக்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 3வது சொத்தான 2.5 செண்டு 7ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்படவில்லை. சர்வே எண் 106/3C ல் உள்ள 60 செண்டு, சர்வே எண் 107ல் உள்ள 12 செண்டு, சர்வே எண் 2/1A ல் உள்ள 7 செண்டு, சர்வே எண் 3/2ல் உள்ள 33 செண்டு, சர்வே எண் 2/3B ல் உள்ள 10 செண்டு ஆக மொத்தம் 1 ஏக்கர் 22 செண்டு எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு 45 செண்டு மட்டும்தான் ஒதுக்கப்பட்டது, 33 செண்டை எனது திருமணச்செலவிற்காக ஒதுக்கினார்கள்.

7. மேற்படி எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 22 செண்டை எனது அப்பா 2003ம் ஆண்டில் எனக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான், அதில் 44 செண்டை 2ம் பிரதிவாதியின் பாகத்தை எனக்கு மாற்றிக்கொண்டு அதற்கு பதிலாக கிணறுடன் சேர்ந்த 53 செண்டை கொடுத்துவிட்டேன். மேற்படி பாகத்தை மாற்றிக்கொண்டதற்கான பரிவர்த்தனை ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவை பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதால்தான் எனக்கு மட்டும் அதிகபாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkisore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.